# நாட்டுப்புறவியல் தகவல்கள்

**ஆங்கிலேயரின் தமிழ் ஆய்வால் தோன்றிய துறைகளில் ஒன்று நாட்டுப்புறவியல்**

- இதற்கு நாட்டார் வழக்காற்றியல் என்று வேறு பெயரும் உண்டு.
- நாட்டுப் புறப்பாடல்கள், கதைகள், விளையாட்டுகள், கலைகள், சமயம், பழக்கவழக்கங்கள், அறிவியல் போன்றன நாட்டுப் புறவியலுள் அடங்கும்.

### நாட்டுப்புறப் பாடல்கள்

- நாட்டார் பாடல்கள், கிராமியப் பாடல்கள், நாடோடிப் பாடல்கள், வாய்மொழி இலக்கியம் என்ற பெயர்களும் உண்டு.
- குடும்பம், தொழில், விளையாட்டுச் சார்ந்த பாடல்கள், விடுகதை, பழமொழி, இதிகாசங்கள், புராணங்கள் போன்றன இதில் அடங்கும்.
- நாட்டுப்புற பாடல்களின் இயல்புகள்

1. பேச்சு வழக்குடையது
2. கொச்சை மொழி கொண்டது
3. கூறியது கூறல் வரும்
4. வாய்மொழியாகப் பரவுவது
5. வடிவம் மாறக் கூடியது
6. படைத்தவர் பெயர் தெரியாதது
7. மக்களின் பக்தி, நீதி, உளவியல், சமுதாயம் என அனைத்துக் கூறுகள் பற்றிக் கூறுவது.

### நாட்டுப்புறக் கதைகள்

- உரைநடைக் கதைகள், கதைப் பாடல்கள் என இருவகைப்படும்.
- காகம் - நரி, முயல் - சிங்கம், எலி – சிங்கம் போன்ற சிறுவர் சிறுகதைகளும், ராஜா ராணிக் கதைகள், பேய்க் கதைகள், பரமார்த்த குரு கதைகள் போன்ற நெடிய கதைகளும் உரைநடைக் கதையில் அடங்கும்.
- அல்லி அரசாணி, பொன்னுருவி மசக்கை போன்ற இதிகாசக் கதைகளும், ஐவர் ராஜாக்
- கதை, கட்டபொம்மன் கதை, தேசிங்குராஜன் கதை போன்ற வரலாற்றுக் கதைகளும்,
- நல்லதங்காள்கதை, முத்துப்பட்டன் கதை போன்ற சமுதாயக் கதைகளும், வள்ளத் திருமணம், சொக்கன் கதை, சுடலைமாடன் கதை போன்ற தெய்வக் கதைகளும் இதில் அடங்கும்.

### நாட்டுப்புற விளையாட்டுகள்

- சடுகுடு, கோலி, கல்லாங்காய், பல்லாங்குழி, கல்லாமண்ணா, கூட்டாஞ்சோறு, கண்ணாமூச்சு, நொண்டி, தாயம் போன்றன இதில் அடங்கும்.

### நாட்டுப்புறக் கலைகள்

- கரகாட்டம், காவடியாட்டம், தெருக்கூத்து, பொம்மலாட்டம், தோற்பாவை போன்ற நிகழ்த்துக் கலைகளும் ஓவியம், சிற்பம், கதைச் சிற்பம் போன்ற பொருட் கலைகளும் இதில் அடங்கும்.

### நாட்டுப்புறச் சமயமும் பழக்க வழக்கங்களும்

- சிறு தெய்வ வழிபாடு, நடுகல் வழிபாடு, முன்னோர் வழிபாடு, குலதெய்வ வழிபாடு, இத்தெய்வங்களுக்கு எடுக்கும் விழாக்கள், இடும் பலிகள், அணியும் ஆடைகள், பயன்படுத்தும் பொருட்கள் போன்றன இதில் அடங்கும்.

### நாட்டுப்புற அறிவியல்

- வானிலை, வேளாண்மை, கட்டடம், நிலவியல், கடலியல், படகு கட்டுதல், மருத்துவம், இசைக் கருவிகள் தயாரித்தல் போன்ற செய்திகள் இதில் அடங்கும்.
- நாட்டுப்புற இசைக் கருவிகள் சில வருமாறு: உடுக்கை, மிருதங்கம், தப்பு, தம்பட்டம், ஜால்ரா, கஞ்சிரா, உருமி, துந்தினா, கரடி வாத்தியம், குடுகுடுப்பை, பம்மை, பறை.
- நாட்டுப்புறப் பாடல்கள் நிலைத்த அமைப்பு உடையன இல்லை.

- நிலைத்த அமைப்புடைய நாட்டுப்புறப் பாடல் வகை பிசி.
- விடுகதையைத் தொல்காப்பியர் பிசி என்று கூறுகிறார்.
- தொல்காப்பியர் கூறும் பண்ணத்தி என்பது நாட்டுப்புறப் பாடல்களைக் குறிக்கும் என்று சொல்பவர்கள் பேராசிரியர், கி.வா. ஜகந்நாதன் ஆகியோர்.
- தொல்காப்பியர் கூறும் புலன் என்ற வனப்பு நாட்டுப்புறப் பாடலைக் குறிக்கும் என்று கூறியவர் ஆறு.அழகப்பன்.
- வள்ளைப்பாட்டு என்பது உலக்கைப் பாட்டு
- வள்ளைப் பாட்டைத் திருப்பொற்சுண்ணம் என்று கூறியவர் மாணிக்கவாசகர்.
- திருப்பூவல்லி என்பது பூத்தொடுப்போர், பறிப்போர் பாடும் பாடல்
- தோழியர் இருவர் விளையாட்டாகப் பாடுவது திருச்சாழல்
- தாலாட்டுப் பாடல் நீலாம்பரி ராகத்தில் பாடப்படும்.
- ‘ஆராரோ’ என்ற தாலாட்டின் தொடக்கத்திற்குத் தத்துவப் பொருள் சொன்னவர் மு.அருணாசலம்
- பிலாக்கணம், கையறுநிலை, இரங்கற்பா ஆகிய ஒப்பாரிப் பாடலின் வேறு பெயர்கள்
- முஸ்லீம், கிறித்தவர், பார்ப்பார் ஆகியோர் ஒப்பாரி பாடுவதில்லை.
- தேன் + பாங்கு – என்பதுதான் தெம்மாங்கு எனத் திரிந்தது என்பர்.
- காதல் சுவை மிகுந்த பாடல் தெம்மாங்கு
- தனிவழிச் செல்லல், வண்டி ஓட்டல் ஆகியவற்றின் போதும் வயல்வெளி, நிலா வெளிச்சம் ஆகிய இடங்களிலும் தெம்மாங்கு பாடப்படும்.
- எண்ணிக்கையுடன் தொடர்புடையது ஏற்றப்பாட்டு
- இராவாண்டை என்பது இரவில் வரும் நிலவை ஆண்பாலாகப் பாவித்து பெண்கள் பாடும் பாட்டு
- மணமாகாத பெண்கள் தமக்கு நல்ல கணவன் வாய்க்க வேண்டும் என்பதற்காகப் பாடப்படும் பாடல் இராவாண்டை
- இலாவணி என்பது மராட்டிய நாட்டுப்புறப் பாடல் மெட்டின் பெயர்
- ஆண்கள் மட்டும் அடிக்கும் கும்மி ஒயிற்கும்மி
- ஒயிற்கும்மியின் பிறப்பிடம் ஆந்திரா
- பழமொழிப் பதிகம் பாடியவர் திருநாவுக்கரசர்
- பழமொழி நானூறு பாடியவர் முன்றுரையரையனார்
- அம்பா பாடல் என்பது தைநீராடலைக் குறிக்கும்
- குரவை என்பது (இசைக்கு ஒரு பெண்ணாக) ஏழு பெண்கள் வட்டமாக நின்று கைகோத்து ஆடும் ஆட்டம்.
- துணங்கை என்பது பெண்கள் பலர் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு ஆடும் ஆட்டம்
- துணங்கை ஆடும்போது ஆண்களும் உடன் இருப்பர்
- பாகவத மேளா என்பது நாட்டிய நாடகம்
- மஞ்சு விரட்டு என்பது ஏறு தழுவுதல்
- ஏறு தழுவுதல் என்பது ஜல்லிக்கட்டு
- ஏறு தழுவல் என்பது தமிழரின் வீர விளையாட்டு
- ஏறு தழுவுதல் குறித்துக் கூறும் ஒரே சங்க நூல் கலித்தொகை
- மஞ்சு விரட்டில் பயன்படுத்தும் கருவி தப்பு, கொட்டு
- அண்ணன்மார்கதை அல்லது குன்றுடைய கவுண்டன் கதை உடுக்கையடித்துப் பாடப்படும்.

**நாட்டுப்புறப்பாடல்**

தொழிற்பாடல் (மீனவர் பாடல்)
விடிவெள்ளி நம்விளக்கு – ஜலசா
விரிகடலே பள்ளிக்கூடம் - ஜலசா
அடிக்கும் அலையே நம்தோழன் - ஜலசா
அருமைமேகம் நமதுகுடை – ஜலசா
காயும் ரவிச்சுடர் கூரை – ஜலசா
கட்டுமரம் வாழும் வீடு – ஜலசா
பின்னல்வலை அரிச்சுவடி – ஜலசா

பிடிக்கும் மீன்கள் நம்பொருட்கள் - ஜலசா
மின்னல் இடிகாணும் கூத்து – ஜலசா
வெண்மணலே பஞ்சுமெத்தை – ஜலசா
முழுநிலாதான் கண்ணாடி – ஜலசா
மூச்சடக்கி நீந்தல் யோகம் - ஜலசா
தொழும் தலைவன் பெருவானம் - ஜலசா
தொண்டு தொழிலாளர் நாங்கள் - ஜலசா

**பதினெண் சித்தர்கள்**

- சித்தர் என்ற சொல் 'சித்' என்ற வடமொழிச் சொல்லிலிருந்து தோன்றியது.
- 'சித்' என்றால் அறிவு
- 18 சித்தர்கள் என்று சொல்வது மரபு. வரையறுத்துக் கூறினார் இல்லை.
    1. அகத்தியர்
    2. பட்டினத்தார்
    3. பத்திரகிரியர்
    4. சிவாக்கியர்
    5. பாம்பாட்டிச் சித்தர்
    6. இடைக்காட்டுச் சித்தர்
    7. அகப்பேய்ச் சித்தர்
    8. குதம்பைச் சித்தர்
    9. கடுவெளிச்சித்தர்
    10. அழுகுணிச் சித்தர்
    11. கொங்கணச் சித்தர்
    12. பீர் முகமது
    13. மதுரை வாலைசாமி
    14. சட்டைமுனி
    15. திருமூலர்
    16. உரோமரிரி
    17. கருவூரார்
    18. இராமலிங்க அடிகளார்

மேலும் ஔவையார், ஏனாதி சித்தர், களைச் சித்தர் போன்றோரும் உண்டு.

**1. அகத்தியர்**

- சித்தர்களின் தலைவர் அகத்தியர்
- சித்த மருத்துவ முறையை வகுத்தவர்
- ஆயுர்வேத சூத்திரங்களுக்கு விரிவுரை எழுதியவர்
- அவர் பாடிய சித்தர்பாடல்கள் 'ஞானப்பாமாலை' என்று வழங்கப்படுகிறது.
- அடக்கம் பெற்ற தலம் அனந்தசயனம் ஆகும்.

**மேற்கோள்**

"மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாமே"
"மாடுதான் ஆனாலும் ஒரு போக்குண்டு
மனிதனுக்கோ அவ்வளவுந் தெரியாதப்பா"

**2. பட்டினத்தார்**

- இயற்பெயர் சுவேதாரண்யர்
- பெற்றோர் சிவநேச செட்டியார் - ஞானகலை ஆச்சி ஊர் காவிரிப்பூம் பட்டினம்
- பட்டினத்து வணிகர் ஆதலால் பட்டினத்தார் எனப்பட்டார்.
- இவருக்குத் திருவெண்காடர் என்ற பெயரும் உண்டு
- இவரின் சீடர் பத்திரகிரியார்
- அடக்கம் பெற்ற தலம் திருவொற்றியூர்

**மேற்கோள்**

"கொட்டி முழக்கி அழுவார், மயான்ம்குறுகி அப்பால் எட்டி அடி வைப்பாரோ இறைவா கச்சி ஏகம்பனே"
"பொல்லாதவன் நெறி நில்லாதவன், ஐம்புலன்கள் தம்மை வெல்லாதவன்"
"நின் அஞ்நெழுத்தை
சொல்லாப் பிழையும் துதியாப்பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே"

"உன்பற்று ஒழிய ஒருபற்றும் இல்லை உடையவனே"
"முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென்னிலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே"
"ஒன்றென்றிரு தெற்வம் உண்டென்றிரு"
"மெய் ஒன்றுசாரச் செவிஒன்று கேட்க விரும்பும்யான் செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய் வினைதீர்ப்பவனே"

- ❖ கச்சித் திருவகவல் உடல் நிலைமையைக் கூறுகிறது.
- ❖ ஒரு மடமாதுவும் ஒருவனும் ஆகி – என்பது உடற்கூற்று வண்ணம் கூறுகிறது.

**3. பத்திரகிரியார்**

- ❖ உஞ்சனை மாகாளபுரத்து அரசர்
- ❖ பட்டினத்தாரைக் குருவாக ஏற்றுக் கொண்டவர்
- ❖ சோற்றுச் சட்டியும் நாய்க் குட்டியையும் வைத்திருந்தால் பட்டினத்தாரால் சம்சாரி என்று கூறப்பட்டவர்
- ❖ இவர் பாடல் மெய்ஞ்ஞானப் புலம்பல் என்று அழைக்கப்படுகிறது.
- ❖ 235 கண்ணிகள் உள்ளன.
- ❖ ஏல்லா கண்ணிகளும் 'எக்காலம்' என்னும் வினாவாகவே முடிகின்றன.

**மேற்கோள்**

"ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனையும் கட்டறுத்துத் தூங்காமல் தூங்கி சுகம்பெறுவது எக்காலம்"

**4. சிவவாக்கியர்**

- ❖ இயற்பெயர் தெரியவில்லை
- ❖ சித்தர்களில் மிகுந்த சீர்திருத்தவாதி
- ❖ இவர் பாடல்கள் சந்த ஓட்டம் உடையன
- ❖ சிவ வாக்கியரும் திருமழிசை ஆழ்வாரும் ஒருவரே என்று கருதுவாரும் உண்டு.

**மேற்கோள்:**

"சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே
வேர்த்திரைப்பு வந்தபோது வேதம் வந்து உதவுமோ"
"நாலு வேதம் ஓதுவீர் ஞானபாதம் அறிகலீர்"
"கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா"
"சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவையை அறியுமோ"
"பறைச்சியாவது ஏதடா பணத்தியாவது ஏதடா
இறைச்சி தோல் எலும்பிலும்
இலக்கமிட்டுஇருக்குதோ"

**5. பாம்பாட்டிச் சித்தர்**

- ❖ இயற்பெயர் தெரியவில்லை
- ❖ செத்த பாம்பை ஆட வைத்ததால் அல்லது பாம்பை ஆடும்படித் தூண்டியதால் பாம்பாட்டிச் சித்தர் எனப் பெயர் பெற்றார் என்பர்
- ❖ பிறந்த ஊர் பாண்டி நாட்டுக் கோகர்ணம்
- ❖ வாழ்ந்த இடம் கொங்கு நாட்டு மருதமலை
- ❖ மொத்த பாடல் 129
- ❖ அடக்கம் பெற்ற ஊர் விருத்தாசலம்

**மேற்கோள்**

"நாதர் முடிமேல் இருக்கும் நாகப்பாம்பே நச்சுப்பையை
வைத்திருக்கும் நல்ல பாம்பே" "இருவர் மண் சேர்த்திட
ஒருவர் பண்ண ஈரைந்து மாதமாய் வைத்த சூளை
அருமையாய் இருப்பினும் அந்தச் சூளை
அரை காசுக்கு ஆகாது என்று ஆடு பாம்பே"

**6.இடைக்காட்டுச் சித்தர்**

- ❖ இயற்பெயர் தெரியவில்லை
- ❖ பிறந்த ஊர் தொண்டை நாட்டு இடைக்காடு
- ❖ இடையர் குலம்
- ❖ கொங்கணச் சித்தரின் சீடர்
- ❖ மொத்தம் 130 பாடல்கள்
- ❖ இவரது பாடல்கள் இடையர்களின் பசுவைப் பார்த்தும் இடையர்களின் தலைவனைப் பார்த்தும் பாடுவதாக அமைத்துள்ளன.
- ❖ அடக்கம் பெற்ற ஊர் திருவண்ணாமலை

**மேற்கோள்**

"மனம் என்னும் மாடுஅடங்கினால்
தாண்டவக்கோனே – முத்தி
வாய்த்தது என்று எண்ணடா தண்டவக் கோனே
சினம் என்னும் பாம்பு அடங்கினால்
தாண்டவக்கோனே – யாவும்
சித்தி என்று நினையடா தாண்டவக் கோனே"

### 7. அகப்பேய்ச் சித்தர்

- ❖ இயற்பெயர் தெரியவில்லை
- ❖ அகப்பைச் சித்தர் என்பது மரூஉ
- ❖ மொத்தம் 90 பாடல்கள்
- ❖ பேயாக அலையும் மனதை 'அகப்பேய்' என்று பெண்ணாக உருவகித்து முன்னிலைப்டுத்திப் பாடியதால் இப்பெயர் பெற்றார் என்று கூறுவர்.
- ❖ அடக்கம் பெற்ற ஊர் அழகர்மலை

**மேற்கோள்**

"சைவம் ஆரக்கடி அகப்பேய்!
தன்னை அறிந்தவர்க்கே
சைவமான இடம் அகப்பேய்!
சற்குரு பாதமடி"
பிறவி தீரவென்றால் அகப்பேய்!
பேதகம் பண்ணாதே
துறவி யானவர்கள் அகப்பேய்!
சும்மா இருப்பார்கள்"

### 8. குதம்பைச் சித்தர்

- ❖ இயற்பெயர் தெரியவில்லை
- ❖ குதம்பை என்பது ஒருவகைக்காதணி. ஆதனை அணிந்த பெண்ணை முன்னிலைப்படுத்தி 'குதம்பை' என்று விளித்துப் பாடியதால் 'குதம்பை சித்தர்' எனப்பட்டார்.
- ❖ இடையர் குலத்தைச் சேர்ந்தவர்
- ❖ அடக்கம் பெற்ற ஊர் மாயூரம்
- ❖ 32 பாடல்கள் பாடியுள்ளார்

**மேற்கோள்**

"அல்லவை நீக்கி அறிவோடு இருப்போாக்குப்
பல்லக்கு ஏதுக்கடி? – குதம்பாய்
பல்லக்கு ஏதுக்கடி?"
"மாங்காய்ப்பால் உண்டு மலைமேலே இருப்போர்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி? – குதம்பாய்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி?"

### 9. கடுவெளிச் சித்தர்

- ❖ சித்தர் பாடல் - ஆசிரியர் - கடுவெளிச் சித்தர்
- ❖ நானூறு ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் காடு மலைகளில் வாழ்ந்தவர்கள் சித்தர்கள்
- ❖ பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகுணிச் சித்தர் என்பன எல்லாமே காரணப் பெயர்கள்.
- ❖ கடுவெளிச் சித்தர், உருவ வழிபாடு செய்யாமல் வெட்டவெளியையே கடவுளாக வழிப்பட்டவர்.
- ❖ ஏளிய சொற்களில் அறிவுரைகளைச் சொன்னவர்.
- ❖ இயற்பெயர் தெரியவில்லை.
- ❖ கடுவெளி என்றால் சுத்தவெளி, அதாவது பிரமம் பிரமத்தைக் கடுவெளி என்றதால் 'கடுவெளிச் சித்தர்' எனப்பட்டார்.
- ❖ இவரது பாடல்களில் நீதிக் கருத்துகள் மிகுதி
- ❖ 34 பாடல்கள்

**மேற்கோள்**

"பாவம் செய்யாதிரு மனமே – நாளை
கோபம் செய்தே எமன் கொண்டோடிப் போவான்"
"நந்தவனத்தல் ஓர் ஆண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டுவந்தான் ஒரு தோண்டி – அதை
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி"
"தூடணமாகச் சொல்லாதே – தேடும்
சோத்துக்களில் ஒரு தூகம் நில்லாதே"

**10. அழுகுணிச் சித்தர்**

- இயற்பெயர் தெரியவில்லை
- இவர் பாடல்களில் அழகும் அணியும் சேர்ந்திருப்பதால் அழுகுணிச்சித்தர் எனப் பெயரிடப்பட்டார்.
- அழுவது போன்ற சந்த யாப்பில் இவர் பாடல் உள்ளதால் இவரை அழுகுணிச் சித்தர் என்றும் அழுகுணி சித்தர் என்றும் அழைப்பர்.
- இவர் பாடல்களின் எண்ணிக்கை 32
- இவர் பாடல் ஒவ்வொன்றிலும் 'கண்ணம்மா' என்ற விளிச்சொல் வருகிறது.

**மேற்கோள்**

"அஞ்சாத கள்ளனடி அளுமற்ற பாவியடி
நெஞ்சாரப் பொய்சொல்லும் நேயமில்லா நிட்டூரன்
கஞ்சா வெறியனடி கைசேதம் ஆகும் முன்னே
அஞ்சாதே என்று சொல்லி என் கண்ணம்மா
ஆண்டிருந்தால் ஆதாதோ"
"மாமன் மகளடியோ மச்சினியோ நானறியேன்
காமன் கணை எனக்குக் கனலாக வேகுதடி
மாமன் மகளாகி மச்சினியும் நீயானால்
காமன் கணையெல்லாம் என் கண்ணம்மா
கண் விழிக்க வேகாதோ"

**11. கொங்கணச் சித்தர்**

- இயற்பெயர் தெரியவில்லை
- கொங்கு நாட்டவராக இருக்கலாம்
- வாலைக் கும்மி அடித்தவர்
- ஆன்மாக்கள் கும்மி அடிப்பதாக உருவகித்துள்ளனர்.
- இவரின் சீடர் இடைக்காட்டுச் சித்தர்
- 111 பாடல்கள்
- மருத்துவ நூல், யோக நூல், இரசவாத நூல், கடைக்காண்டம், திரிகாண்டம், கொங்கணர் ஞானம், குணபாகம் ஆகிய நூல்களை இயற்றியவர்
- 'கொக்கென நினைத்தாயோ கொங்கணவா' (வாசுகி) என்ற கதைக்குரியவர்
- அடைக்கலம் பெற்ற ஊர் திருப்பதி

**மேற்கோள்**

"கட்டாத காளையைக் கட்டவேணும் - ஆசை
வெட்ட வேணும் - வாசி ஒட்ட வேணும்
ஏட்டாத கொம்பை வளைக்க வேணும் - காயம்
என்றைக்கு இருக்குமோ வாலைப் பெண்ணே"
"பஞ்சை பனாதி அடியாதே – அந்தப்
பாவம் தொலைய முடியாதே"
"ஆணும் பெண்ணும் கூடி ஆனதனால் - பிள்ளை
ஆச்சுது என்றே நீரும் பேசுகின்றீர்
ஆணும் பெண்ணும் கூடி ஆனதல்லோ – பேதம்
அற்று ஒரு வித்தாச்சு வாலைப் பெண்ணே"

**12. பீர் முகமது**

- இஸ்லாம் சமயச் சித்தர்
- ஞானரத்தினக் குறவஞ்சி பாடியவர்
- 64 கண்ணிகள் பாடியுள்ளார்
- இவர் பாடல்கள் வினாவிடையாகச் செல்கிறது
- சிங்கன் கேள்வி கேட்பதாகவும் சிங்கி பதில் சொல்வதாகவும் அமைந்துள்ளது.

**மேற்கோள்**

"எப்படி உலகினில் இப்படி உருவானோம்
சிங்கி அது
அப்பன்தன் நட்புக்கு ஒப்பிய தாயாலே சிங்கா"
"எங்கும் பரந்த பரம்பொருள் என்னடி சிங்கி – அது
அங்குஇங்கு எங்குமாய்க் கண்ட பெருவெளி சிங்கா"

**13. மதுரை வாலைச்சாமி**

- இயற்பெயர் தெரியவில்லை
- ஞானத்தைப் பெண்ணாக உருவகித்து, அவளை விளித்துப் பாடியுள்ளார்.
- கும்மியடி மெட்டில் பாடல் புனைந்தவருள் இவரும் ஒருவர்.

**மேற்கோள்**

"பூட்டைத் திறந்து கையாலே – மனப் பூட்டைத்

திறப்பது மெய்யாலே
வீட்டைத் திறக்க முடியாமல் - விட்ட
விதி இது என்கிறார் ஞானப்பெண்ணே
"அண்டமும் பிண்டமும் பாழாச்சே – அதற்கு
அப்பாலும் பெரும் பாழாச்சே
உண்டுஇல்லை என்ற பராபரப் பிரமத்தை
உவந்து கும்மி அடியுங்கடி"

**14. சட்டை முனி**

- இயற்பெயர் தெரியவில்லை
- போக முனிவரின் மாணவர்
- உரோமரியுடன் மாறுபாடு கொண்டவர்
- பூஜை விதிகளைப் பற்றி அதிகம் பாடியவர்
- இயற்றிய நூல்கள் சட்டை முனி ஞானம், சடாட்சரக் கோவை, கல்பம் நூறு, ஞானநூறு, வாதநிகண்டு, சட்டைமுனி 1200, நவரத்தின வைப்பு.

**மேற்கோள்**

"காணப்பா பூசைசெய்யும் முறையைக் கேளாய்கைம்
முறையாய்ச் சுவடிவைத்துப்பூசை செய்வார்
பூணப்பா சிலபேர்தான் தீபம் வைத்துப் புகழாகப்
பூசைசெய்வார் பெண்ணைவைத்தும்
நாளப்பா சக்கரத்தைப் பூசை செய்வார் நம்முடைய பூசை
என்ன மேருப்போலே
ஓதப்பா நாற்பத்து முக்கோணம் வைத்தே உத்தமனே!
பூசைசெய்வார் சித்தர் தானே"

**15. திருமூலர்**

- **திருமந்திரம்**

1. "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளத் தேனே".
\- திருமூலர்

**16. உரோமரிீ**

- புசுண்ட மாமுனிவர் மாணவர்
- மானிடர் வயது நூறு என்றும், ஒரு நாளைக்குச் சுவாசம் 21600 என்றும் கணக்கிட்டுச் சொன்னவர்

**மேற்கோள்**

"மூடாமல் சிறிது மனப்பாடம் பண்ணி முழுவதும்
அவன் வந்ததுபோல் பிரசங்கித்து வீடுஏது இங்கு
உடல்ஏது யோகம் ஏது வீண் பேச்சாச்
சொல்லியல்லோ மாண்டுபோனார்
காடேறி மலையேறி நதிகள் ஆடி காய் கிழங்கு
சருகுதின்று காமத்தீயால் சூடேறி மாண்டவர்கள்
கோடாகோடி சொருமுத்திப் பெற்றவர்கள்
சுருக்கமாச்சே"

**17. கருவூரார்**

- பூசை விதிகளைப் பாடியவர்
- தஞ்சை பெரிய கோயில் லிங்கத்திற்கு அஞ்டபந்தனம் செய்தவர்
- ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பா பாடியவர்
- இவரது பூஜைவிதிப் பாடல்கள் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன.
- மொத்தம் 30 பாடல்கள்

**மேற்கோள்**

"பூசையது செய்வம் என்று கூட்டம் கூடி
புத்திகெட்டு கைம்முறையின் போக்கை விட்டு பாசையது
மிகப்பேசி பாட்டும் பாடிப்
படிப்பார்கள் மந்திரத்தின் பயனைக் காணார்
ஆசையிலே பெண்ணாசை மயக்கத் தாலே அங்கிருந்த
வுாமத்தைப் பங்கு போட்டுப் பேசையிலே மனம் வேறாய்
நினைப்பான் பாவி
புரட்டு உருட்டாய் நினைவுதப்பிப் பேசுவானே"

**18. இராமலிங்க அடிகளார்**

❖ **திருவருட்பா**

"கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான்என்
எண்ணில் கலந்தே இருக்கின்றான் - பண்ணில்
கலந்தான்என் பாட்டில் கலந்தான் உயிரில்
கலந்தான் கருணை கலந்து".

- இராமலிங்க அடிகளார்

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாட்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்".

- இராமலிங்க அடிகளார்

**ஔவையார்**

❖ இவர் பிற்காலத்தில் வாழ்ந்த வேறோர் ஔவையார்
❖ ஞானக் குறள் என்ற நூல் பாடியவர்
❖ இதில் 210 பாடல்கள் உள்ளன.

**ஏனாதி சித்தர்**

❖ ஏனாதி என்பது படைவீரர்களுக்கு அளிக்கும் பட்டம்
❖ 10 பாடல்கள் பாடியுள்ளார்
❖ பாடல்கள் தாழிசையால் ஆனவை
❖ பாடலின் முதற்பகுதி சித்தர் கேட்பதும் (வினாவாகவும்) பிற்பகுதி ஏனாதி கூறும் விடையாகவும் அமைந்துள்ளது.

**காளைச்சித்தர்**

❖ ஞானத்தை உழவுத்தொழில் செய்வதாக உருவகம் செய்ததால் இப்பெயர் பெற்றது.
❖ மொத்தம் 8 பாடல்கள்
❖ ஏற்றப் பாட்டு வடிவில் இவர் பாடல்கள் அமைந்துள்ளன.

**சில செய்திகள்**

❖ சித்தர்களில் பெரும்பாலானோர் சைவர்கள் எனினும் இவர்கள் சாதி சமயங்களைக் கடந்தவர்கள்
❖ பக்தி செலுத்தி முக்தி அடைவதே பிறவாதிருக்க வழி என்பது பக்தர் கொள்கை பருவுடலை நுண்உடல் ஆக்குவதே பிறவாதிருக்க வழி என்பது சித்தர் கொள்கை.
❖ 'கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்' என்று தேவாரம் கூறுகிறது.
❖ சித்தர்களில் பஞ்சமர் (ஐவர்) என்று குறிப்பிடப்படுபவர்கள்.
1. திருமூலவர் 2. சிவவாக்கியர் 3. பட்டினத்தார்
4. திருமாளிகைத் தேவர் 5. கருவூரார்
❖ சடங்குகளையும் சடங்குகளோடு கூடிய வழிபாடுகளையும் போற்றாதவர்கள் சித்தர்கள்
❖ யாப்பு இலக்கணத்தை மீறி ஓசைக்கும் பொருளுக்கும் முதன்மை கொடுத்துப் பாடியவர்கள் சித்தர்கள்.
❖ பேச்சு வழக்குச் சொற்களைப் பாடலில் மிகுதியாகக் கையாண்டவர்கள்.
❖ இளங்கோவடிகள், மாணிக்க வாசகருக்குப் பின் நாட்டுப்புறப்பா வடிவங்களுக்கு முதன்மை கொடுத்தவர்கள் சித்தர்கள்.
❖ கும்மி, சிந்து, கண்ணி போன்ற நாட்டுப்புற பா வடிவங்களுக்கு முதன்மை கொடுத்தவர்கள்
❖ பிற்கால நாட்டுப்புற வடிவங்களான பள்ளு, குறவஞ்சி, போன்ற நூல்களுக்கு முன்னோடிகள்
❖ சித்தர் பாடல்கள் 'மக்கள் இலக்கியம்' என்று போற்றப்படுகின்றன.
❖ உலகு, உயிர், உடல், மனம் என்ற நான்கு நிலைகளில் தத்துவங்களைப் புலப்படுத்தியவர்கள்

- ❖ இவர்கள் கண்ட இயற்கைப் பொருள் மருத்துவக்கலை 'சித்த மருத்துவம்' என்று அழைக்கப்படுகிறது.
- ❖ இராமலிங்க வள்ளலார், தாயுமானவர், பாரதியார் போன்றோருக்கு எளிய நடையில் பாடல் எழுத வழிகாட்டியவர்.
- ❖ பௌத்த சமய சித்தர்கள் சாரணர்கள் எனப்பட்டனர்
- ❖ இஸ்லாம் சமய சித்தர்கள் மஸ்தான்கள் எனப்பட்டனர்.

**அட்டமா சித்தி**

1. அணிமா – அணுவைப்போல சிறியதாதல்
2. மகிமா – மலைபோல் பெரியதாதல்
3. இலகுமா – காற்றைப் போல் லேசாதல்
4. கரிமா – பொன்போல் பளுவாதல்
5. பிராப்தி – எல்லாவற்றையும் ஆளுதல்
6. வசித்துவம் - எல்லாரையும் வசப்படுத்துதல்
7. பிராகாமியம் - கூடுவிட்டுக் கூடுபாய்தல்
8. ஈசத்துவம் - விரும்பியதைச் செய்தல்

- ❖ பூதம் 5, நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
- ❖ ஞானேந்திரியம் 5. மெய், வாய், கண், மூக்கு, செவி
- ❖ கர்மேந்திரயம் 5. வாக்கு (வாய்), பாணி (கை), பாதம் (கால்), பாயு (மலவாய்), உபஸ்தம் (கருவாய்)
- ❖ தன்மாத்திரை 5. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
- ❖ அந்தக் கரணங்கள் (அகக்கருவிகள்) 4. மனம், புத்தி (அறிவு), சித்தம் (நினைவு), அகங்காரம் (முனைப்பு)
- ❖ குணம் 3. ராஜஸம் (மன எழுச்சி), தாமஸம் (மயக்கம்), சாத்வீகம் (அமைதி)
- ❖ மூலம் 3. ஆணவம், கன்மம், மாயை
- ❖ ஆதாரங்கள் 6. மூலம் (மூலாதாரம்), கொப்பூழ் (சுவாதி'டானம்), மேல்வயிறு (மணிபூரகம்), நெஞ்சம் (அநாகதம்), மிடறு (விசுத்தம்), புருவநாடு (ஆக்நேயம்)
- ❖ உடல்கள் 3. பருவுடல், நுண்ணுடல், காரண உடல்
- ❖ கர்மங்கள் 3. இருப்புவினை (சஞ்சிதகர்மம்), நுகர்வினை (பிரார்த்த கர்மம்), நிகழ்வினை (ஆகாமிய கர்மம்)
- ❖ சக்திகள் 6. வைப்பாற்றல் (பரிக்கிரக சக்தி), மறைப்பாற்றல் (திரோதான சக்தி), விழைவாற்றல் (இச்சா சக்தி), அறிவாற்றல் (ஞான சக்தி), செயலாற்றல் (கிரியா சக்தி), அறிவாற்றல் (சிற்சக்தி)

எங்களது Facebook பக்கம்

English – Examsdaily தமிழ் – Examsdaily Tamil

எங்களது WhatsAPP Group - Click Here